1973 பிப்ரவரி 5]

கொடுப்பதற்கு இயலாமல் இருக்கிற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரிவுக்கு அதிகப்படியான மருத்துவர்களை நியமிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது வேலை செய்கிற டாக்டர்களைக்கூட எனக்குத் தெரியும். எனவே டாக்டர்கள் காண வில்லை என்ற குறைபாடு இல்லை. இடவசதி பெருக்கப்படவேண்டு மென்ற எண்ணம் இருக்கிறது. எந்த அளவிற்கு இடவசதியைப் பெருக்கமுடியும் என்பது மருத்துவமனை இருக்கிற இடத்தைப் பொறுத்தது.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்கள்.

***6. வினா—திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரிகளை அரசு ஏற்க திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இம் மாவட்டத்தில் ஆறு பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களை அரசு ஏற்கனவே ஏற்றுள்ளது கடந்த ஆண்டில். இந்த ஆண்டில் அவை செயல் முறைக்கு வரும்.

திரு. எஸ். கணேசன் : ஒன்றியங்களுக்குச் சொந்தமான மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்றுக்கொள்வதில் ஏதாவது விதிமுறைகள் அனுசரிக்கப்படுகிறதா ? எல்லா ஒன்றிய மருத்துவ மனைகளையும் வருகிற ஆண்டில் அரசே ஏற்றுக்கொள்வதற்கு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒன்றிய மருத்துவமனைகள் என்றிருந்த காரணத்திலும், எடுத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ மனைகள் தற்போது ஒன்றியங்களினால் நடத்தப்பட்ட காரணத் தினாலும், அவ்வாறு விடையளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவை எல்லாம் மாவட்ட ஆட்சி மன்றங்கள் இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட மருத்துவமனைகளாகும். அப்போது தொடங்கப் பட்டவை ஏறத்தாழ 225 உள்ளன. அவற்றை ஆண்டுக்கு 40 வீதம் எடுக்க முயற்சிக்கவேண்டுமென்று கடந்த ஆண்டு கருதப்பட்டது. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு

கட்டடங்கள் இருக்கவேண்டும். சுற்றுப் பகுதியில் இடம் இருக்க வேண்டும். மேலும் தேவையானல் அந்தக் கட்டடத்தில் இப் போது வசதியில்லை என்ருல், புது வசதிகளைச் செய்து தரவும் ஒன்றியம் ஓரளவிற்கு முன்வரவேண்டும். அப்படி அமைகிற இடமாகப் பார்த்து, இடவசதியைப் பார்த்து மருந்தகங்கள் அரசினரால் எடுக்கப்பட்டுள்ளன.

காச நோயாளிகளுக்கு உதவி.

***7. வின—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) க்ஷயரோக வியாதியால் கஷ்டப்படும் ஏழைகளுக்கு சர்க்கார் உதவிப்பணம் கொடுத்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெறும் பிணியாள ராக இல்லாமல், வெளியிலிருந்து வந்து சிகிச்சைபெறும் பிணி யாளராக தொடர்ந்து ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் ஒவ்வொரு காசநோயாளிக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஓராண்டு காலத்திற்கு உதவித்தொகை மாதம் ரூபாய் 20 வீதம் கொடுக்கப்படுகிறது.

திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, தற்சமயம் அரசாங்கம் கொடுக்கும் பணம் சத்துணவு வாங்கிச் சாப்பிடு வதற்குப் போதுமானதாக இல்லை என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 1967 வரையில் ரூ. 10 தான் கொடுக்கப்பட்டு வந்தது. அதற்குப் பின்னர் தான் 1967-க்கு முன்னல் இருந்த காலகட்டம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ரூ. 10 போதாது என்று ரூ. 20 ஆக கொடுக்கப் பட்டது. இது உதவித் தொகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. புறப் பிணியாளர்கள் தொடர்ந்து காச நோய்க்கு மருந்தைப் பெற்றுச் சாப்பிடுவதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிற வகையில் தான் இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் 1½ ஆண்டு